ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2024.06.12 |

**இலங்கை மத்திய வங்கி பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரியாக தொழிற்படுதல்**

இலங்கையில் பணம் மாற்றல் சேவைகளை வழங்குகின்ற வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அல்லது வேறு தொடர்புடைய அதிகாரிகளினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், முறைசார்ந்த முறைமைக்கு வெளியில் தொழிற்படுகின்ற ஒரேமாதிரியான சேவைகளை வழங்குகின்ற சில நிறுவனங்கள் பணம் மாற்றல் முறைமைக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் தொடர்பான நிதியிடல் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு உட்படுத்தப்படாது தொழிற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

இதனை நிவர்த்திசெய்வதற்காக, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2024 ஏப்பிறல் 20ஆம் திகதியிடப்பட்ட 2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைவழங்குநர்கள் ஒழுங்குவிதிகளை வழங்கினார். அதற்கமைய, 2024 யூன் 03 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பதிவுசெய்யப்படாத அல்லது உரிமமளிக்கப்படாத பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் அவர்களது தொழிற்பாடுகளை முறைசார்ந்ததாக ஆக்கிக்கொள்வதற்கும் முறையான வழிகளூடாக பணம் மாற்றல் தொழிலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பினை வழங்குவதற்கும் அவர்கள் பதிவுசெய்யப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டுமென அனைத்து பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களையும் இவ்வொழுங்குவிதிகள் தேவைப்படுத்துகின்றது.

இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக, பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை என்பது "தொடர்பூட்டல், செய்தி, மாற்றல் வாயிலாக, அல்லது பதிவுசெய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகள் வழங்குநர் உரித்தாகின்ற தீர்ப்பனவு வலையமைப்பு ஊடாக பணத்தின், காசோலைகளின், வேறு நாணயச் சாதனங்களின் அல்லது பெறுமதிச் சேமிப்புக்களின் ஏற்றுக்கொள்ளல் அத்துடன் பயன்பெறுநரொருவருக்குப் பணமாக அல்லது வேறு வடிவங்களில் நேரொத்த தொகையொன்றின் கொடுப்பனவில் ஈடுபடுகின்ற நிதியியல் சேவைகள்" எனப் பொருள்படும். அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடையீட்டாளர்களையும் மூன்றாம் திறத்தவரொருவருக்கான இறுதிக் கொடுப்பனவொன்றினையும் ஈடுபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள், இலங்கையினுள் அல்லது ஏதேனும் வேறு நாட்டினுள், இலங்கைக்கு அல்லது ஏதேனும் வேறு நாட்டுக்கு, அல்லது இலங்கையிலிருந்து அல்லது ஏதேனும் வேறு நாட்டிலிருந்து, ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கானதாகவிருக்கலாம்.

இவ்வொழுங்குவிதிகளின் பிரகாரம், ஆளொருவர் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் அதிகாரத்தின் கீழும் அத்துடன் பதிவுச் சான்றிதழின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும் மாத்திரம் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் தொழிலில் ஈடுபடுதல் வேண்டும் அல்லது

அவ்வாறு தொழிற்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கி அல்லது ஏதேனும் வேறு ஒழுங்குமுறைப்படுத்துநர் அல்லது அரசாங்க நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட ஏதேனும் வேறு உரிமத்தின், அனுமதிப்பத்திரத்தின் அல்லது அதிகாரமளித்தலின் கீழ் ஏற்கனவே பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் தொழிலில் ஈடுபடுகின்ற அல்லது அவ்வாறு தொழிற்படுகின்ற எவரேனும் ஆள் மேற்குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளார். மேலும், இலங்கை மத்திய வங்கியினால் அல்லது ஏதேனும் வேறு ஒழுங்குமுறைப்படுத்துநர் அல்லது அரசாங்க நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமம், அனுமதிப்பத்திரம் அல்லது அதிகாரமளித்தல் இன்றி ஏற்கனவே சேவைகளை வழங்குகின்ற தற்போதுள்ள பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் இவ்வொழுங்குவிதிகளின் செயலுறு திகதியான 2024 யூன் 03ஆம் திகதியிலிருந்து ஒரு ஆண்டினுள் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பதிவுச்சான்றிதழுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் தொழிலில் ஈடுபடுதவதற்கு அல்லது அவ்வாறு தொழிற்படுவதற்கு ஆளொருவருக்கு இவ்வொழுங்குவிதிகளின் கீழ் முக்கிய தேவைப்பாடுகள் பின்வருமாறு:

அ. குறைந்தது ரூபா இருபது மில்லியன் (20 மில்.) அல்லது இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும் அத்தகை வேறுதொகையினைக் கொண்ட சேதமிழக்காத மூலதனத்தைக் கொண்டுள்ள 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்றாகவிருத்தல் வேண்டும்.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் சொற்பொருளுக்குள் வருகின்ற உத்தரவாதம் மூலம் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று அல்லது கரைகடந்த கம்பனியொன்று அல்லது வெளிநாட்டுக் கம்பனியொன்று இவ்வொழுங்குவிதிகளின் கீழ் பதிவுசெய்வதற்கு தகைமைபெறாது.

ஆ. பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் ஒருவரின் வியாபாரத்தை அல்லது நடவடிக்கைகளை பிரத்தியேகமாகக் கொண்டு நடாத்துதல்.

இ. பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குவதற்காக முறைமையொன்றினை அல்லது நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட பொறிமுறையொன்றை பேணுதல்/தொழிற்படுதல்.

பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் ஒருவரின் தொழிலில் ஈடுபடுவதற்கு உத்தேசிக்கின்ற தகைமையுடைய ஆளொருவர் விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பத்தினை உரியவாறு பூர்த்திசெய்து இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்து பதிவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அத்தகைய பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட கம்பனியொன்று ''பதிவுசெய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்'' என குறிப்பீடுசெய்யப்படும் என்பதுடன் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநரொருவராக தொழிலில் ஈடுபடுவதற்கு அல்லது பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநராகத் தொழிற்படுவதற்கு உரித்துடையவராகவிருப்பார். மேலும், இத்தொழிற்செயன்முறையின் போது பதிவுசெய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் மற்றும் அவர்களது முகவர்களுக்கிடையிலான ஊடுகடத்தல்கள் வங்கி மாற்றல்கள் வாயிலாக அமைந்திருத்தல் வேண்டும். மேலும், பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற முகவர்கள், இணைக்கம்பனிகள், ஊழியர்கள் பற்றிய பதிவுகளையும் ஊடுகடத்துபவர், பயன்பெறுநர், முகவர், மாற்றல் முறை, பாதுகாப்பாகப் பேணுகின்ற

காலப்பகுதி போன்றவற்றின் விபரங்கள் உள்ளடங்கலாக கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய பதிவுகளையும் பேணுவதற்கும் அவர்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியானது, பதிவுசெய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வைசெய்யும் அதிகாரியாகத் தொழிற்படும். அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியானது எவரேனும் பதிவுசெய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநரின் மேற்பார்வையினை மேற்கொள்ளலாம் என்பதுடன் அவர்களின் தொழில் பற்றிய ஏதேனும் விடயம் தொடர்பில் கொண்டுநடாத்தப்பட வேண்டிய விதம் தொடர்பில் எவரேனும் ஒரு அல்லது ஒன்றுக்குமேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர்கள் மீது தேவைப்படுத்தல்களை வழங்கலாம்.

இப்புதிய தேவைப்படுத்தல்களுக்குக் கீழ் பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநராக வரக்கூடியவர்கள் அல்லது ஏற்கனவேயுள்ளவர்கள், உரியகால அடிப்படையில் இவ்விடயத்துடன் இணங்கியொழுகுவதற்குத் தேவையான நடவடிக்கையினை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளனர். மேற்குறித்த ஒழுங்குவிதிகளை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/psd_reg_2024_1_t.pdf என்ற இணைப்பினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிகத் தெளிவுபடுத்தல்களுக்கு 011 2477642 என்ற தொலைபேசி மற்றும் mvts@cbsl.lk. என்ற மின்னஞ்சல் ஊடாக இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தை தொடர்புகொள்ளலாம்.